1978 மார்ச் 27]

செஞ்சி வட்டத்தில் பொதுப்பணித் துறையின் பிரிவு அலுவலகம்.

335 வினா—**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்தில் பொதுப் பணித்துறையின் பிரிவு அலுவலகம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10.10]

2. தகவல் கோரல்.

(அ) தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் வண்டியில் தமிழில் செய்தி அறிவிக்கப்படுவது குறித்து.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, சென்ற வாரத்தில் நான் எழுப்பிய பிரச்சினைக்கு தென்னிந்திய ரயில்வேயிலிருந்து தகவல் வந்து இருக்கிறது. சென்னையில் இருந்து டெல்லிக்குச் செல்லும் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்ஸில் தமிழிலும் செய்திகள் அறிவிக்கப்படுகிறது என்று செய்தி வந்து இருக்கிறது. அரசுக்கு ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ரயில்வே துறை சம்பந்தமான எந்த விவரங்களையும் பாராளுமன்றத்திலே கேட்டுப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் வந்து இருந்தால் அவர் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதி இருக்கலாம். அதற்கு அவருக்குப் பதில் வந்திருக்கலாம். இதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை.